



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.8.2025) சென்னை, கோட்டூர்புரத்தில் உள்ள தமிழ் இணையக் கல்விக்கழகம் எதிரில் அமைந்துள்ள சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தைத் தொடங்கி வைத்து மாணவ – மாணவியரிடம் கலந்துரையாடினார். இந்த நிகழ்ச்சியில், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளு மன்ற உறுப்பினர் விஜய் வசந்த், துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், சென்னை இதழியல் நிறுவனத்தின் சிறப்பு பணி அலுவலர் எஸ்.ஏ.ராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், மாநில திட்டக்குழு செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சன், சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தின் நிருவாகக் குழுத் தலைவர் என்.ரவி, தலைமை இயக்குநர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினருக்கான மாநில ஆணையத்தின் துணைத் தலைவர் இமயம், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் தலைவர் டிராட்ஸ்கி மருது, தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைத் துறையைச் சார்ந்த நக்கீரன் கோபால், திருமாவேலன், கார்த்திகை செல்வன், சுரேஷ் குமார், குணசேகரன், சமஸ், திருமதி. லட்சுமிசுப்பிரமணியன், காமராஜ், நிருபன் சக்கரவர்த்தி உள்ளிட்ட ஊடகவியலாளர்கள், வழக்கறிஞர் காந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி 1–ல்

# தேர்வு செய்யப்பட்ட 89 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஆக. 26- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.8.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் துணை ஆட்சியர், காவல் துணை கண்காணிப்பாளர் உள்ளிட்ட தொகுதி 1இல் அடங்கிய பல்வேறு பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 89 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப் பேற்றதிலிருந்து. கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம். ஆசிரியர் தேர்வு வாரியம் உள்ளிட்ட தேர்வு முகமைகள் வாயிலாக 79,940 நபர்களுக்கும் பல்வேறு அரசுத் துறைகளில் நேரடி நியமனம், உள்ளாட்சி அமைப்புகள், அரசுத் துறை நிறுவனங்கள் என பல்வேறு அமைப்புகளின் வாயிலாக 38,110 நபர்களுக்கும், என மொத்தம் 1,18,050 நபர்களுக்குப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதிக்கான முக்கிய பணியிடங்களுக்கான பணிகளில் 15 துணை ஆட்சியர்கள், 23 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 14 உதவி ஆணையர்கள் (வணிக வரி), 21 கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர்கள், 14 உதவி இயக்குநர்கள் (ஊரக வளர்ச்சி), ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் மற்றும் ஒரு மாவட்ட அலுவலர் (தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள்) என மொத்தம் 89 பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றையதினம் 20 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். பணிநியமன ஆணைகளை பெற்றுக் கொண்டவர்கள், முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.

அகில இந்திய பணிகள் மற்றும் ஒன்றிய அரசு பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்படும் பணியாளர்களுக்கு நடத்தப்படும் அடிப்படை பயிற்சியை (Foundation Course) போன்றே தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி1 இல் அடங்கிய பல்வேறு பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்படும் அலுவலர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதன் பேரில், கடந்த ஆண்டு முதல், தொகுதிI அலுவலர்களுக்கு பொது அடிப்படை பயிற்சி ஆரம்பிக்கப்பட்டு, தற்போது பணி நியமனம் வழங்கப்பட்டுள்ள 89 தொகுதி1 அலுவலர்களுக்கு. வரும் செப்டம்பர் 8ஆம் நாள் முதல் சென்னை, அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் (Anna Administrative Staff College) பொது அடிப்படைப் பயிற்சி (Common Foundation Course) வழங்கப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி.என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மனித வள மேலாண்மைத் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.8.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் துணை ஆட்சியர், காவல் துணை கண்காணிப்பாளர் உள்ளிட்ட தொகுதி 1–இல் அடங்கிய பல்வேறு பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 89 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி.என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மனித வள மேலாண்மைத் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட
### முத்தமிழறிஞர் கலைஞரின் 102–வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு
# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



கீ.வ.குப்பம் மத்திய ஒன்றியம்,
வேலூர் மாவட்டம்.



போளூர் நகரம்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



காடையாம்பட்டி பேரூர்,
சேலம் மத்திய மாவட்டம்.



அரூர் பேரூர்,
தருமபுரி மேற்கு மாவட்டம்.



அருப்புக்கோட்டை நகரம்,
விருதுநகர் தெற்கு மாவட்டம்.



மானாமதுரை கிழக்கு ஒன்றியம்,
சிவகங்கை மாவட்டம்.



தொட்டியம் மேற்கு ஒன்றியம்,
திருச்சி வடக்கு மாவட்டம்.



ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றியம்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



மணிமுத்தாறு பேரூர்,
திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்.